

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் அவர்களின் ஏற்பாட்டின் பேரில் சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற "முத்தமிழறிஞருக்கு இசையஞ்சலி கலைஞர் வார்த்த காவியப்பாடல்கள் நிகழ்ச்சியில், பாடகர்கள் எஸ்.என். சுரேந்தர், டாக்டர் சங்கர் கணேஷ், தீபன் சக்கரவர்த்தி, டி.எல். மகராஜன், எஸ்.ஏ. ராஜ்குமார், டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம், செந்தில்தாஸ், பாடகி திருமதி மாலதி ஆகியோரது இசை நிகழ்ச்சிகளை கண்டு ரசித்தார். இந்நிகழ்ச்சியில், கழகத்தின் பொதுச்செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் உள்ளிட்ட தோழமைக் கட்சித் தலைவர்கள், இந்து குழும இயக்குநர் என். ராம் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், கவிஞர் நெல்லை ஜெயந்தா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற "முத்தமிழறிஞருக்கு இசையஞ்சலி கலைஞர் வார்த்த காவியப்பாடல்கள்" நிகழ்ச்சியில், பாடகர்கள் எஸ்.என். சுரேந்தர், டாக்டர் சங்கர் கணேஷ், தீபன் சக்கரவர்த்தி, டி.எல். மகராஜன், எஸ்.ஏ.ராஜ்குமார், டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம், செந்தில்தாஸ், பாடகி திருமதி மாலதி உள்ளிட்ட இசை கலைஞர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி சிறப்பு செய்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, எ.வ. வேலு, பி.கே. சேகர்பாபு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.இராசா, எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் உள்ளிட்ட தோழமைக் கட்சித் தலைவர்கள். இந்து குழும இயக்குநர் என். ராம் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், கவிப்பேரரசு வைரமுத்து, தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், கவிஞர் நெல்லை ஜெயந்தா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி

# இலாயிட்ஸ் காலனியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி தீர்வுகளை வழங்கினார்!



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2025) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 120 வி.பி.ராமன் சாலை, லாயட்ஸ் காலனியில் உள்ள ஐ.டி.ஐ. கல்லூரியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை" நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு உடனிருந்தார்.

சென்னை, ஆக.9 –

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட லாயிட்ஸ் காலனியில் உள்ள ஐ.டி.ஐ. கல்லூரியில் நடைபெற்ற முகாமினை நேரில் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.**

பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களின் கீழ் பொதுமக்களின் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் ஜூலை 15 முதல் நவம்பர் 2025 வரை அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 10,000 முகாம்கள் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று, விண்ணப்பத்தினை பெற்று, பூர்த்தி செய்து தங்கள் விண்ணப்பத்தினை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக 15.07.2025 முதல் 14.08.2025 வரை "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் 109 முகாம்கள் நடைபெறுகிறது. இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறுகின்றன.

சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், வார்டு120 வி.பி.ராமன் சாலை, லாயட்ஸ் காலனியில் உள்ள ஐ.டி.ஐ. கல்லூரியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும்பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை உள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் மக்களிடமிருந்து மனுக்கள் பெ

ற்று உரிய பதிவுகளை மேற்கொண்டு அதற்கான ஒப்பமும் வழங்கப்பட்டது. முகாமிற்கு வருகை தந்த பொது மக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 120 வி.பி.ராமன் சாலை, லாயட்ஸ் காலனியில் உள்ள ஐ.டி.ஐ. கல்லூரியில் நேற்று முன்தினம் (7.8.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் இடம்பெற்ற ஒவ்வொரு அரசு துறை பகுதிக்கும் நேரில் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் PVTG

# பழங்குடி மக்களின் நல்வாழ்வுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் என்ன? ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

## மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக.9 –

இந்தியாவில் சமூக, பொருளாதார, கல்வி உள்ளிட்ட அளவுகோல்களில் மிக மிக பின் தங்கியுள்ள PVTG என அழைக்கப்படும் "குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுக்களின் தற்போதைய நிலை பற்றி திமுக துணை பொது செயலாளரும், திமுக நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்விகளை எழுப்பினார்.

"PVTG பழங்குடியின குழுக்களின் நலனை உறுதி செய்வதற்காக தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின் விவரம் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தத் திட்டங்களின் கீழ் மாநில வாரியாக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி மற்றும் இதனால் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை விவரங்கள் என்ன?

ஆறு PVTGகளான தோடர்கள், கோத்தர்கள், குரும்பர்கள், இருளர்கள், பணியர்கள் மற்றும் காட்டுநாயக்கர்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக, இந்த நிதி ஆண்டில் மானிய உதவித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிதிகளின் விவரம் என்ன?

தமிழ்நாட்டில் PVTGs பழங்குடியினர் குறித்த பல நோக்கு ஆய்வுகள் செய்ய வேண்டும் என இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சிலின் (ICSSR) அழைப்பு விடுத்துள்ளதற்கு அரசின் பதில் என்ன?

தமிழ்நாட்டில் இந்த PVTG கள் பற்றி அரசாங்கத்தால் நடத்தப்பட்ட அடிப்படை ஆய்வுகளின் நிலை மற்றும் அதன் விளைவில் உருவாக்கப்பட்ட செயல் திட்டங்கள் என்ன?" என்று கனிமொழி கருணாநிதி எம்பி கேள்விகளை எழுப்பினார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் பழங்குடியினர் விவகார துறை இணை அமைச்சர் துர்கா தாஸ் உக்கே அளித்த பதில் வருமாறு:-

"18 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 75 PVTG சமூகங்களின் சமூகபொருளாதார மேம்பாட்டிற்காக பிரதம மந்திரி ஜன ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் (PM JANMAN) திட்டத்தை பிரதமர்2023 நவம்பர் 15 அன்று தொடங்கி வைத்தார்.

PVTG சமூக மக்களுக்குபாதுகாப்பான வீடு, சுத்தமான குடிநீர் மற்றும்



கல்வி, சுகாதாரம் மற்றும் மேம்பட்ட ஊட்டச் சத்து உறுதி செய்தல், சாலை மற்றும் தொலைத்தொடர்பு இணைப்பு, மின்சார வசதி இல்லாத வீடுகளில் மூன்று வருடங்களில் மின்மயமாக்கல் மற்றும் நிலையான வாழ்வாதார வாய்ப்புகள் போன்ற அவர்களின் சமூகபொருளாதார நிலைமைகளை மேம்படுத்த அடிப்படை வசதிகளை வழங்குவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் நோக்கங்கள் ஒன்றிய அரசின் 9 அமைச்சகங்களால் 11 வகையான தலையீடுகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

PM JANMAN திட்டத்தின்மொத்த பட்ஜெட் ரூபாய் 24,104 கோடி. இதில் ஒன்றிய அரசின் பங்கு 15, 336 கோடி ரூபாயாகவும், மற்றும் மாநில அரசுகளின் பங்கு 8768 கோடி ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு அமைச்சகமும் அதற்கென ஒதுக்கப்பட்ட தலையீட்டை செயல்படுத்துவதற்கு பொறுப்பாகும்.

இந்த திட்டத்தின் கீழ் 2023-24 தொடங்கி தற்போதைய 2025 - 26 நிதியாண்டு வரை நாடு முழுவதும் 293.77 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பன்னோக்கு மையங்கள், வன் தன் விகாஸ் கேந்திர கிளஸ்டர் என இரண்டு வகைகளாக இந்த நிதி செயல்படுத்தப்படுகிறது.

மேலும் இந்த திட்டத்தின் கீழ் மாநிலஅரசாங்கங்கள், யூனியன் பிரதேசங்கள் மூலமாக ஒன்றிய பழங்குடி விவகார அமைச்சகம், கிராமங்கள் மற்றும் குடியிருப்புகளில் வசிக்கும் PVTGமக்கள் தொகை புள்ளிவிவரங்கள் மற்றும் உள்கட்டமைப்பு பற்றி மதிப்பிடுவதற்கு, PM GATI SHAKTI மொபைல் பயன்பாடு மூலம் குடியிருப்பு அளவிலான தரவு சேகரிப்பு பயிற்சியை மேற்கொண்டுள்ளது.

மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்களால் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், நாடு முழுவதும் 47 லட்சத்து 50 ஆயிரத்து 126 PVTG மக்கள் இருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்நாட்டில் 3,65,473 PVTG மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பழங்குடியினர் விவகார அமைச்சகம் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான பழங்குடி மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக "ஏக்லவ்யாமாதிரி குடியிருப்புப் பள்ளி (EMRS)" என்ற முதன்மைத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. EMRS களில் ஒவ்வொன்றிலும் 5% இடங்கள் PVTGமாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

தேசிய ஃபெல்லோஷிப் திட்டத்தில், 750 இடங்களில் 25 இடங்கள் PVTG மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. எஸ்டி மாணவர்களுக்கான தேசிய வெளிநாட்டு உதவித் தொகையின் கீழ், 20 இடங்களில் 3 இடங்கள் PVTG மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு நிதியாண்டிலும் "பட்டியல் பழங்குடியினரின் நலனுக்காகப் பணியாற்றும் தொண்டு நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகளுக்கு மானிய உதவி" திட்டங்களின் கீழ் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தமிழ்நாட்டில் 2020-21 நிதியாண்டில் ஒரு கோடியே 17 லட்சம் ரூபாய், 2021-22 நிதி ஆண்டில் 2.75 கோடி ரூபாய் , 2022-23 நிதி ஆண்டில் 2.5 கோடி ரூபாய், 2023-24 நிதி ஆண்டில் 3.77 கோடி ரூபாய், 2024-25 நிதி ஆண்டில் 1.89 கோடி ரூபாய், இந்த 2025-26 நிதி ஆண்டில் இது வரை 20 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் (ICSSR) தெரிவித்தபடி, தமிழ்நாட்டில் PVTG சமூகங்கள் தொடர்பான 4 முக்கிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று ஒன்றிய அமைச்சர் பதில் அளித்துள்ளார்.